செ.வெ.எண்: 648 நாள்: 07.11.2020

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் 153 பயனாளிகளுக்கு ரூ.78.41 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (07.11.2020) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

வளர்ந்த நாடுகள் மற்றும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான நோய் தடுப்பு நடவடிக்கையின் பயனாக தமிழகம் முழுவதும் கொரோனா பாதிப்பு குறைந்து வருகிறது. பண்டிகை காலம் தொடங்கும் இந்த காலகட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல், கைகழுவுதல் போன்ற நோய் தடுப்பு நடவடிக்கைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

ஏற்கனவே அறிவுறுத்தியபடி நெரிசல் மிகுந்த இடங்களுக்கு வயதானவர்கள் மற்றம் குழந்தைகளை அழைத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும். தீபாவளியை பொது மக்கள் அனைவரும் நோய் பாதுகாப்பு சுயகட்டுப்பாட்டுடன் கூடிய தீபாவளியாக கொண்டாட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் அரசுப்பள்ளியில் பயின்ற மாணவ, மாணவிகள் மருத்துவக்கல்லூரியில் பயில 7.5 சதவீதம் உள்ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன்படி நவம்பர் 3ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 3ஆம் தேதி முதல் இதுவரை 27,400

விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. 16 ஆம் தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்படும். அதன் பின் ஓரிரு நாட்களில் கலந்தாய்வு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழவுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழவுத்துறை அமைச்சர் அவர்கள் ஆட்சியரகத்தில் வருவாய் துறையின் சார்பில் 148 பயனாளிகளுக்கு ரூ.70.41 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, விபத்து நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் 64-வது தேசிய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு நடத்திய விளையாட்டு போட்டிகளில் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து கலந்து கொண்டு வெற்றி பெற்ற 5 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.8 லட்சம் மதிப்பில் ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் த.ஜெயலெட்சுமி, மாவட்ட விளையாட்டு அலுவலர் அந்தோணி அதிஷ்டராஜ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**